**கவனிக்க.**- *2006.03.31 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1440 - 2006 අප්‍රේල් 07 වැනි සිකුරාදා - 2006.04.07

*1440 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 314 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 321 |


**கவனிக்க.**- (i) வங்கித் தொழிற் (திருத்தம்) சட்டமூலம் 2006, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2006, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) இறப்பர் மீளநடுகை மானி (திருத்தம்) சட்டமூலம் 2006, மாச்சு 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, ஏப்பிறல் 12 ஆந் தேதி புதன்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, மாச்சு 31 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

B2-B 079126

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தர வான்படை

பயிலிளவல் அலுவலர் வெற்றிடங்கள்

01. இலங்கை நிரந்தர வான்படையில் கீழ்வரும் பிரிவுகளில் பயிலிளவல் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன.

(அ) பொதுக்கடமை விமான ஓட்டுனர் பிரிவு
(ஆ) நிருவாகப் பிரிவு
(இ) நிருவாக ரெஜிமன்ட் பிரிவு
(ஈ) வான் வழி நடத்துனர் பிரிவு

02. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(அ) ***பொதுக்கடமை விமான ஓட்டுனர் பிரிவு :***

குறைந்த பட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம் (1999/ 2000 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II), ஆங்கிலத்தில் திறமைச்சித்தியுட்பட விஞ்ஞானம் சிங்களம்/ தமிழ், விஞ்ஞானம் (1999/ 2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரி யாயின் விஞ்ஞானம் II) பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய/ பழைய) பாடத்திட்டங்களில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல் பிரிவுகளில் 3 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) ***நிருவாகப் பிரிவு :***

குறைந்த பட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், (1999/ 2000 ஆண்டுகளில் விண்ணப் பதாரியாயின் கணிதம் II), சிங்களம் அல்லது தமிழ் மொழியில் சித்தியும் அத்துடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய/ பழைய) பாடத்திட்டங்களில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல்/ வர்த்தகம் பிரிவுகளில் 3 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) ***நிருவாக ரெஜிமன்ட் பிரிவு :***

குறைந்த பட்சம் க. பொ. த. (சா. த. ) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதம், விஞ்ஞானத்தில் (1999/ 2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II, விஞ்ஞானம் II) சித்தியும் அதில் ஒன்றுக்கும் ஆங்கிலத்திற்கும் திறமைச்சித்தியும் அத்துடன் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய/பழைய) பாடத்திட்டங்களில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல், வர்த்தகம்/ கலைப் பிரிவில் 3 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) ***வான் வழி நடத்துனர் பிரிவு :***

குறைந்த பட்சம் க. பொ. த. (சா. த. ) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச்சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கணிதத்தில் (1999/ 2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் கணிதம் II) ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட விஞ்ஞானம் (1999/2000 ஆண்டுகளில் விண்ணப்பதாரியாயின் விஞ்ஞானம் II), சிங்களம் அல்லது தமிழ் மொழியில் சித்தியும் அத்துடன் க.பொ.த. (உ. த.) பரீட் சையில் (புதிய/ பழைய) பாடத்திட்டங் களில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல் பிரிவுகளில் 3 பாடங்கள் சித்தி பெற்றி ருத்தல் வேண்டும்.

03. **வேறு தகைமைகள் :-** இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப் பதாரிகள் இலங்கை வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும்.

(அ) *தேசிய இனம் .-* ஓர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *வயது :* 2006, யூன் 30 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 22 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) *உயரம் :* 5 அடி 5 அங்குலத்திற்கு (162.5 செ. மீ.) குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) *உடல் நிறை :* உடற்திணிவு - நிறை (கி. கி.) 25
- உயரம் (மீ) 2

(உ) *மார்பு :* ஆண் 32" - (குறைந்தது)

(ஊ) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்* - CP2

(எ) தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தியும் கண்ணாடி பயன்படுத்தப் படாமலும்)

(ஏ) *குடியியல் நிலை :* தேர்வு நாடிகள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போதும் ஆணை பெற்ற தேதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகளுக்கு தகுந்த கவனிப்பு அளிக்கப்படும்.

5. இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தவுடன் உயரம் கண்பார்வை அளக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

6. ***சேவை நிபந்தனைகள் :-*** (அ) தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் கிளையைப் பொருத்து இருக்கும் பின் ஏனைய பதவி வரிசையிலான

ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவிவரிசையில் நிரந்தர ஆணையொன்றை அவர் பெருவார்.

(ஆ) பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை ஏவுநரினால் தீர்மானிக்கப்பட்டவாறான, இலங்கையிலுள்ள அத்தகைய இடங்களில் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

(இ) பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்வரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

(ஈ) ஒவ்வொரு பயிலிளவலுக்கும் சீருடைகள் அனைத்தும் உபகரணங்கள் மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

(உ) பயிலிளவலின் பயிற்சி காலத்தின்போது பயிலிளவலுக்கு வான்படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்ட உணவும் வழங்கப்படும்.

(ஊ) ஒரு பயிலிளவல் பயிற்சியின் போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அதுகாலவரையில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

(எ) ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின்போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணைபெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லத பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின்சார்பில் வான்படை ஏவுநருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஏ) பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் உ, ஊ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 20 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத்தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லத பாதுகாவலர் இந்தப்படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஐ) பந்தி 02 இலும் 03 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வு நாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தரப்பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அலுவலர் தரப்பரீட்சையில் சித்தி பெறும் தேர் நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். (எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச்சபைக்கு உட்படுத்தப்படுவர்) இந்தச் சோதனைகளில் திருப்திகரமாகச் சித்தி பெற்ற விமான ஓட்டுனர் விண்ணப்பதாரிகள் விமானத்தில் பறத்தல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இறுதி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு கிளைகளுக்கும் தேவைப்படும் தேர் நாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப்பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

(ஒ) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகா அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(ஓ) திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

(ஔ) எல்லா அலுவலருக்கும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

(அஅ) எல்லா அலுவலருக்கும் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

**7. அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கை குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆகப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆகப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

**8. சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) இலங்கை வான் படையில் பயிலுனர்களுக்கும் ஆணைபெற்ற அலுவலர்களுக்குமான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :-

*பயிலிளவல்* - ரூபா 1,15,320
*பைலற் ஆபீசர்* - ரூபா 1,33,380
*பிளையிங் ஆபிசர்* -ரூபா 1,57,500 - 9 X 3,780 - ரூபா 1,91,520
*ப்ளைற் லெப்டினன்ட்* - ரூபா 1,80,180 - 9 X 3,780 - ரூபா 2,14,200
*ஸ்குவாட்ரன் லீடர்* - ரூபா 2,02,860 ரூபா - 7 X 3,780 - 1 X 4,200 - 2 X 630 -ரூபா 2,46,120
*விங் கமான்டா* - ரூபா 2,14,980 - 2 X 7,740 - 5 X 8,580 - ரூபா 2,73,360
*குறுப் கப்ரன்* - ரூபா 2,76,540 - 7 X 11,880 - ரூபா 3,59,700

(ஆ) *ஏனைய கொடுப்பனவுகள்:-*

(1) இடைக்கால கொடுப்பனவு I மாதமொன்றுக்கு ரூபா 1,000.00
(2) இடைக்கால கொடுப்பனவு II மாதமொன்றுக்கு ரூபா 1,200.00

(3) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 1,000.00

(4) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250.00 வீதம் வழங்கப்படும்.

(5) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600.

(6) விசேட கொடுப்பனவு யுத்தப்பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,400.00 (மாதமொன்றுக்கு)

(7) விஷேட கொடுப்பனவு யாழ் குடாநாட்டில் சேவையாற்று பவர்களுக்கு ரூபா 3,000.00 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100.00 வீதமும் கொடுப்பனவு வழங்கப்படும்.)

(8) சீருடை பேணுதல் படி : மாதமொன்றுக்கு ரூபா 255

(9) சேவயாளர்படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்).

(10) உணவுப்படி : மாதமொன்றுக்கு ரூபா 6,213.64 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்).

(11) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(12) ஆண்டொன்றுக்கு 3 சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், துணைவிக்கும் பிள்ளைகளுக்கும்).

(13) உணவு விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணச் செலவின மீளளிப்பு.

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்.)

(16) திருமணமான அலுவலருக்கு மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து முப்பது மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. பொ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) பறத்தல் சம்பளம் மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 1,700 வரை (பொதுக்கடமை விமான ஓட்டுனர் கிளையில் உள்ளவர்களுக்காகும்.)

(18) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (ஃபைலற் ஒபீசர் இருந்து குறுப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1500 - 3,850) வாடகைப்படிகள் கொடுபடற்பால னவாகும்.

(இ) *ஓய்வூதியங்கள்/பணிக்கொடைகள்:*

ஓய்வூதியங்கள்/பணிக்கொடைகள் காலத்திற்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடைகள் கோவையின் நியதிகளின்படி கொடுபடற்பாலனவாகும். எல்லா அலுவலர்களும் விதவைகள், அனாதைகள் (ஆயுதம் தாங்கிய படைகள்) ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துபவராவர். உதவுதொகை 1970 ஆம் ஆண்டின் விதவை, அநாதை (ஆயுதம் தாங்கிய படைகள்) ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளபடியனவாகும்.

09. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**- (அ) விண்ணப் பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 26.04.2006 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் “பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை வான்படை, ஏக்கல, கொட்டுகொட” என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் “பயிலிளவலுக்கான விண்ணப்பம்” ............................ கிளை, எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒரு விண்ணப்பகாரர் ஒரு தொழிலுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் அத்தோடு ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும். முடிவுத் தேதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடு களுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/ குடியியல் தாபனங்களில் இருக்கின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் திணைக்கள/கூட்டுத்தாபன/சபை/ குடியியல் தாபன தலைமை அதிகாரிகளூடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள் விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப் படின் விடுவிக்கப்படுவார் என்ற சான்றிதழொன்றையும் கொண்டிருத் தல் வேண்டும்.

(இ) தேர்வுநாடி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது அல்லது அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது பின்வருவனவற்றின் மூலப் பிரதிகளை காண்பிக்குமாறு தேவைப்படுத் தப்படுவர் :

(i) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ii) விண்ணப்பித்த கிளைக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) அவை.

(iv) இரு குணநலச் சான்றிதழ்கள். இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்வி கற்ற பாட சாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்க ளுக்கு மேலாக விண்ணப்பக் காரரை நன்கு அறிந்துள்ள வாறான பொறுப்பு வாய்ந்த ஆள் ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும்.

(v) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) விண்ணப்பங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுக்கப்படமாட்டா.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

10. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பகாரரை ஆளாக்கிவிடும்.

11. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன.-** (அ) மேலே கூறப் பட்டுள்ள நிபந்தனையை பூர்த்தி செய்யும் தேர்வுநாடிகளில் இருந்து மட்டும் பூர்வாங்கத் தெரிவுகள் செய்யப்படும். தேர்வுநாடிகள் வான்படை ஏவுநரால் விதித் துரைக்கக் கூடியவாறான அத்தகைய சோதனை களுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். இதன் பின்னர் தெரிவுச் சபை ஒன்றினாலான நேர்முகப் பரீட்சையின் பின்னர் இறுதித் தெரிவு நடைபெறும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் தேர்வு நாடி களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், தேதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந் தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைகளைத் தொடர்ந்து பொருத்தமாகக் கூடியவாறான தேர்வுநாடிகள் வான் படை மருத்துவச் சபைக்கு சமூகமளிக்கும்படி தேவைப்படுத்தப்படுவர்.

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்பும் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் தேர்வுநாடிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

ஜி. டி. பெரேரா,
எயர் மாஷல்,
வான்படை ஏவுநர்.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. இல. 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

*................................ கிளையில் பயிலிளவல் அலுவலர் பதவி*

1. முழுப்பெயர் :----.
(தேசிய அடையாள அட்டைப்படி)

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

3. (அ) தற்போதைய தபால் முகவரி :----.
(ஆ) நிரந்தர முகவரி :----.
(இ) நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :----.
(ஈ) மாவட்டம் :----.
(உ) தேர்தல் தொகுதி :----.
(ஊ) கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
(எ) தொலைபேசி இலக்கம் :----.

4. (அ) பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
2006.06.30 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

5. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா :----.

6. தேசிய இனம் :----.
(இலங்கை பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா எனவும், பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் தேதியையும் குறிப்பிடுக) :----.

7. உயரம் : ------ அடி : ------ அங்குலம் : ------

8. பாடசாலை அத்துடன் / அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :-

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | திகதி | | பொதுப் பாடசாலை களும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | சேர்ந்த | விலகிய | |
| | | | |

9. பாடசாலை / பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |
| | | | |

10. பெற்றோர் பற்றிய விபரங்கள்

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் தற்போதைய முகவரி |
|---|---|---|
| தந்தை | | |
| தாய் | | |

11. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

12. விளையாட்டுகளில் தற்போதைய சாதனைகள் பற்றிய விபரங்கள் : ----.
(பங்குபற்றிய குழுக்கள், போட்டிகள் பற்றிய விபரங்கள் தேதியுடனும் பெற்ற சாதனைகளுடன் தருக) :----.

13. புறம்பான சாதனைகள், பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (தேதிகளுடன் விபரத்தையும் தருக) :----.

14. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

15. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

16. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா? அல்லது பிணையில் விடப்பட்டீரா? அப்படியாயின் விபரங்கள் தருக :----.

17. இதற்கு முன்னர் அரசாங்க திணைக்களத்திலோ அல்லது பகிரங்க துறையில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

18. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

19. **விண்ணப்பக்காரர் கைச்சாத்தி வேண்டிய வெளிப்படுத்துகை:**

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவிக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கை முறைமையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

.............................................
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :----.

20. **விண்ணப்பக்காரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :**

(அ) இலங்கை வான்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 19 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் ..................................................................................................
இவருக்கு நான் பெற்றோர்/பாதுகாவலர் ஆவேன்.

(ஆ) மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பகாரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொறுப்பாளியாவேன்.

(1) பயிற்சியின்போது ஆணைக்கான அவரது தேர்வுநாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கைக் குடியரசிற்கு திருப்பக் கொடுப் பதற்கும்,

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாடு காரணங்களுக்காக ஆணை வழங்கப்படுவதற்குத் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கைக் குடியரசினால் அக்காலம் வரை உறப்பட்ட செலவுகள் யாவும் இலங்கைக் குடியரசுக்குத் திரும்பச் செலுத்து வதற்கும்.

..................................................................
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

..................................................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

............................................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்.

பெயர் (பெரிய எழுத்துக்களில்) :----.
முகவரி :----.
திகதி :----.

### தகைமை மற்றும் சிரேஷ்ட அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் 1 ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கல்

1999.07.02 ஆம் திகதிய 1086/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை அதிபர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பின் 17 மற்றும் 18 வரையான வாசகங்களின் ஒழுங்கு முறைகளுக்கமைய இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் 1 ஆம் தரத்திற்கு தகைமை மற்றும் சிரேஷ்ட அடிப்படையில் பதவி உயர்வு வழங்க அதற்கு தகைமை வாய்ந்தவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரித்து அனுப்ப வேண்டும்.

2. (அ) 2005.12.31 ஆம் திகதியன்று இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் 2 ஆம் தரத்தில் 5 வருடங்களை விடக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தகைமை மற்றும் சிரேஷ்ட அடிப்படையில் சேவையின் 2 ஆம் வகுப்பின் 1 ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க கருத்திற்கொள்ள தகைமை பெறுவார்கள்.

**குறிப்பு**.- திருப்திகரமான சேவைக் காலம் எனப்படுவது:

(i) பதவி உயர்விற்காக தகைமை பெற 2005.12.31 ஆம் திகதியன்று அண்மித்த 5 வருட காலத்திற்குள் தமது சகல சம்பளப்படி உயர்வுகளையும் பெற்றிருக்குமானால் மற்றும்

(ii) உரிய காலத்திற்குள் மேற்கொண்ட ஏதாவது ஒரு தவறுக்காக ஒழுக்காற்றுத் தண்டனைகள் பெறாதிருத்தல்

3. **சம்பள அளவுத்திட்டம்** : ரூ. 1,86,180 - 5 x 7,740 - 5 x 8,580 - ரூ. 2,67,780

4. விண்ணப்பப்படிவத்தின் 1-13 வரையான கூட்டினுள் சகலதையும் சரியாக பூரணப்படுத்துவது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். அக்கூட்டினுள் ஒன்றை அல்லது ஒழுங்காக பூரணப்படுத்தாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமான 2006.05.05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பக்கூடியவாறு முன்கூட்டியே தங்களது விண்ணப்பப்டிவம் இரு பிரதிகளாக தயாரித்து ஒன்றை தங்களது வலய அலுவலகத்திற்குப் பொறுப்பான வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும். மற்றைய விண்ணப்பப்படிவத்தை செயலாளர், கல்வி அமைச்சு, "இசுருபாய", பத்தரமுல்லை என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். கிடைத்த விண்ணப்பப்படிவங்கள் சகலதும் 2006.05.05 ஆந் திகதிக்கு முன்னர் வலயக்கல்விப் பணிப்பாளரினால் பரிந்துரை செய்து கல்வி அமைச்சுக்கு அனுப்ப வேண்டும்.

5. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) *விண்ணப்பப்படிவம்* :

இவ்வறிவத்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் கடதாசியின் இரு பக்கமும் பயன்படுத்தப்பட்டும் இருக்க வேண்டும். 8 1/2 x 12 அளவுக் கடதாசியில் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) சகல முறைகளிலும் மாதிரி படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப் பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவம் தபாலில் காணாமற் செல்லல் அல்லது தாமதித்தல் சம்பந்தமாக விடுக்கப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

(இ) விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது.

6. **தகைமைகளை பரிசீலனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சை** :

(அ) தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற பணிக்கப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் நிரப்பவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் சமமான எண்ணிக்கையாக இருக்கும். வகுப்பு மற்றும் தரத்தின் சேவைக்காலத்திற்கமைய உயர், சிரேஷ்ட தரம் கொண்ட உத்தியோகத்தர்கள் இவ்வெண்ணிக்கையில் அடங்குவார்கள். (வகுப்பு அல்லது தரத்தின் சிரேஷ்ட தரமாகக் கருதப்படுவது 2 (அ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகுப்புகள் அல்லது தரத்தின் சேவைக்காலம் அல்லது காலங்கள்) இங்கு குறைந்தபட்ச அடிப்படை மட்டம் அரசசேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். இவ்வர்த் தமானி அறிவித்தலுக்கமைய சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கும்போது வெற்றிட எண்ணிக்கையை விட பதவி உயர்விற்காக தகைமை பெற்றவர்கள் இருப்பின் போட்டிப் பரீட்சை நடாத்தி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) அரசசேவை ஆணைக்குழு சபையினால் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் கொண்ட சபையினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகளை உறுதிசெய்வதற்கான ஆவணங்கள் பரிசீலனை செய்யப் படும்.

பதவி உயர்வு வழங்குவதன் மூலம் இலங்கை அதிபர் சேவைக்கான நியமனத்தை அமுல்படுத்தும் திகதி அரசசேவை ஆணைக்குழு சபையின் விருப்பத்திற்கமைய தீர்மானிக்கப்படும். ஏதாவதொரு வெற்றிட எண்ணிக்கை அல்லது சகலதையும் நிரப்ப, நிரப்பாதிருக்க அரசசேவை ஆணைக்குழு சபைக்கு அதிகாரம் உண்டு. இப்பிராமணங்களில் குறிப்பிடப்படாத ஏதாவதொரு விடயங்கள் சம்பந்தமாக அதிபர் சேவையின் பிரமாணக்குறிப்பு, நியமனம் மற்றும் பதவி உயர்வுகளுக்குரியதான சட்டக்கோவை அரசசேவை ஆணைக் குழு சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறு செயற்படுத்தப்படும்.

அரசசேவை ஆணைக்குழு சபையின் உத்தரவின் பிரகாரம்,

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2006, மாச்சு 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தகைமை மற்றும் சிரேஷ்ட அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கல்**

(வலயக் கல்வி அலுவலகத்திற்குப் பொறுப்பான வலயக் கல்விப் பொறுப்பாளரினால் கல்வி அமைச்சுக்குப் பிரதி ஒன்றும், மற்றைய பிரதி விண்ணப்பதாரரினால் நேரடியாக அமைச்சுக்கும் சமர்ப்பிப்பதற்காக)

1. (i) முதலெழுத்துக்களுடன் இறுதியில் வரும் பெயர் :-----. (சம்பளப் பட்டியலில் உள்ளவாறு - தமிழில்)

ஆங்கிலத்தில் :-----.

(ii) முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்படும் பெயர் :---. (தமிழில்) :-----.

ஆங்கிலத்தில் :-----.

2. (i) தற்பொழுது சேவையாற்றும் பாடசாலை மற்றும் முகவரி (தமிழில்) :-----.

ஆங்கிலத்தில் :-----.

(ii) தற்பொழுது வகிக்கும் பதவி :-----.

(iii) ஆசிரியராக நியமனம் பெற்ற முதல் நியமனத் திகதி :-----.

3. பிறந்த திகதி :-----.
2005.12.31. ஆந் திகதியன்று வயது:-
வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----

4. சேவையாற்றும் பாடசாலை அடங்கும் :

(i) மாகாணக் கல்வித் திணைக்களம் :-----.

(ii) வலயக் கல்வி அலுவலகம் :-----.

5. (i) 1086/ 26 கொண்ட தற்போதைய அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பிற்கமைய II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற /உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட திகதி :-----.

(ii) II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் சேவைக் காலம் (31.12.2005 இல்)

வருடங்கள் :----- மாதம் :----- திகதி :-----

6. கல்வித் தகைமை :-----.

7. தொழிற்தகைமை :-----.

8. கலந்துகொண்ட பயிற்சி செயலமர்வுகள் தொடர்பான விபரங்கள் :-----.

9. 2005.12.31 ஆந் திகதியன்று அண்மித்த தொடர்ச்சியான 5 வருடங்களுக்குள் குற்றத்திற்காக ஏதாவதொரு முறையில் வழங்கப்பட்ட (எச்சரிக்கை தவிர) தண்டனை :-----.

10. 2005.12.31 ஆந் திகதியன்று அண்மித்த 5 வருடங்களுக்குள் சகல சம்பளப் படி உயர்வுகளும் பெறப்பட்டுள்ளதா? :-----.

அவ்வாறின்றேல் காரணம் ? :-----.

11. கல்வித்துறையில் விசேட செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரம் :-----.

12. தங்களுக்கு எதிராக தற்பொழுது ஏதாவதொரு ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்படுவதாக இருந்தால் அது சம்பந்தமான தற்போதைய நிலைமை? :-----.

13. 2005.12.31 ஆந் திகதியன்று அண்மித்த 5 வருடங்களுக்குள் பெற்றுக்கொண்ட விடுமுறைகள் தொடர்பான விபரங்கள் :-

| வருடம் | பெற்றுக்கொள்ளப்பட்ட விடுமுறைகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | அமைய | சுகயீன | கடமை | சம்பளமற்ற |
| 2001 | | | | |
| 2002 | | | | |
| 2003 | | | | |
| 2004 | | | | |
| 2005 | | | | |

இலங்கை அதிபர் சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு தகைமை மற்றும் சிரேஷ்ட அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதற்காக கருத்திற்கொள்ள தான் தகைமை கொண்டவர் என்றும் விண்ணப்பப்படிவத்தில் உள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும் உறுதிசெய்கிறேன்.

-----
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----

**திணைக்களப் பொறுப்பாளரின் உறுதியுரை :-**

உத்தியோகத்தரினால் இவ்விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் அவரது தனிப்பிட்ட ஆவணம் மற்றும் உரிய கோவையுடன் ஒப்பிட்டுப் பார்த்து சரியானது என்றும் தகைமை மற்றும் சிரேஷ்ட அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக உத்தியோகத்தர் தகுதியுடையவர் என்றும் உறுதிசெய்கிறேன்.

-----
வலயக் கல்விப் பணிப்பாளர் / திணைக்களப் பொறுப்பாளரின் கையொப்பம்.
(பெயர் மற்றும் பதவி முத்திரையை பதிக்க)

திகதி :-----.

4-34

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொறட்டுவை

தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழு நேரம் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2006 ஆம் ஆண்டு

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமையுடைய ஆண்/ பெண் இருபாலாரிடமும் இருந்து 2006 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. **தேவையான ஆகக்குறைந்த தகைமைகள் வருமாறு :**

(அ) *வயது*.- 2006.03.31 ஆந்திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) *கல்வி*.- க.பொ.த. (சா.த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி (போதனா மொழி) கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரு தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.-

(இ) பின்வரும் நிறுனங்களில் முழு நேரப்பயிற்சியில் ஏற்கனவே இணைந்திருப்போர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்ல என்பதாகவும் கவனத்தில் கொள்க.

(i) தொழிற்பயிற்சி நிறுவகம் - பொறல்ல (இ. தே. தொ. ப. நி. இன் கீழ் இயங்குவது)

(ii) தொழில் பயிலுனர் பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை

(iii) தன்னியக்க பொறியியல் பயிற்சி நிறுவகம் - ஊறுகொடவத்தை

(iv) இலங்கை ஜேர்மன் புகையிரத பயிற்சி நிறுவகம் - இரத்மலானை.

2. **அனுமதிப் பரீட்சை மொழி**.- அனுமதிப் பரீட்சை சிங்களம்/ தமிழ் மொழிகளில் நடைபெறும்.

பயிற்சி போதனைகள்: சிங்களத்தில் எல்லாப் பாடநெறிகளும் தமிழில் மோட்டார் இயந்திரவியல் பாடநெறி மட்டும் நடாத்தப்படும்.

3. **பரீட்சை நிலையம்**.- கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டவாறு விண்ணப்பம் செய்பவர்களுக்கு எழுத்துமூலப் பரீட்சையொன்று கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம் ஆகிய பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். இதற்கு மேலதிகமாக 100 இற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வேறு மாவட்டங்களில் இருந்து கிடைக்கப்பெற்றால் அம் மாவட்டங்களிலும் பரீட்சை நடத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கீழேயுள்ள 4 ஆம் பந்தியில் குறித்த பரீட்சைக் கட்டணங்கள் அனுப்பும் விண்ணப்பதாரர்கள் மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**எழுத்துமூலப் பரீட்சை**.- இப் பரீட்சை கணிதம், அடிப்படை தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்டிருக்கும்.

4. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணமாக ரூபாய் 250ஐ ஏதாவது இலங்கை வங்கியில், கணக்கு இலக்கம் 681490 மொரட்டு வைக்கிளைக்கு வைப்பலிட்டுஅதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அழிந்துபோன அல்லது வேறு மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேற்கூறிய பற்றுச்சீட்டு இணைக்கப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அனுமதிப்பரிட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக்காரணத்தினாலோ பரீட்சைக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை விசேடமாகக் கவனிக்கவும்.

5. **ஆரம்பத் தேர்வு முறை**.- எழுத்து பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்களின் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்படும். (இப் பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப் புள்ளி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

6. **இறுதித் தேர்வு முறை**.-நேர்முகப் பரீட்சைக்கு முன்பதாக செயல்முறை பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறை பரீட்சைப் புள்ளிகளின் 40% உம் நேர்முகப் பரீட்சை புள்ளிகளில் 60% உம் வழங்கப்படும். விளையாட்டு போன்ற வேறு தகைமைகள் இருந்தால் அதற்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படும். விளை யாட்டுக்கள் போன்றவற்றின் சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் வைத்திய பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப் படுவர். இதில் சித்தியடையத் தவறுபவர்கள் பயிற்சியில் இருந்து நீக்கப்படுவர் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

7. **பயிற்சி நெறி**.-

| | |
|---|---|
| மோட்டார் இயந்திரவியல் | - 04 ஆண்டுகள் |
| மில்ரைற் /வார்ப்பியல் | - 04 ஆண்டுகள் |
| வாயுச் சீராக்கல்/குளிரூட்டல் | - 3 1/2 ஆண்டுகள் |
| மின் சக்தியியல் | - 3 1/2 ஆண்டுகள் |
| இயந்திரவியல் | - 3 1/2 ஆண்டுகள் |
| டீசல் இயந்திரவியல் | - 3 ஆண்டுகள் |
| வாகன மின்சாரவியல் | - 3 ஆண்டுகள் |
| ஒட்டு வேலை | - 3 ஆண்டுகள் |

8. **பிணை முறி கைச்சாத்திடல்**.- நிறுவகத்தில் பயிற்சி பெறுவ தற்குத் தெரிவு செய்யப்படும் சகல பரீட்சார்த்திகளும் 04, 3 1/2, 03 ஆண்டுகள் பயிற்சி நெறிகளை வெற்றிகரமாகப் பின்பற்றுவோமென இந்த நிறுவகத்துடனும் தேசிய பயிலுநர் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையுடனும் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டு பிணை முறியொன்றில் கைச்சாத்திடவும் வேண்டும்.

9. **விண்ணப்பப்படிவங்கள்**.- கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயார் செய்யப்பட்டு "கல்சிசை, காலி வீதி, இல. 582, இலங்கை, ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் ஆளணி முகாமையாளர் இற்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " CGTTI/62/2006 " என குறிப்பிடப்படுவதுடன் சகல விண்ணப்பப்படிவங்களும் 210/297 (A4 size) மில்லி மீற்றர் அளவுள்ள கடதாசியில் தயார் செய்யப்படல் வேண்டும்.

10. விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கும் இறுதித் தினம் விண்ணப்பங்கள் 2005.05.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

ஆளணி முகாமையாளர்,
இ. ஜே. தொ. ப. நி.

இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 582, காலி வீதி,
கல்கிசை
தொலைபேசி இல. : 12605625

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்-மொறட்டுவை**

*தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழு நேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி-2005 ஆம் ஆண்டு*

1. (அ) முழுப்பெயர்.----.

   (ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர்.----.

2. (அ) அஞ்சல் முகவரி.----.

   (ஆ) மாவட்டம்.----.

   (இ) மாகாணம்.----.

3. (அ) பிறந்த திகதி.----.

   (ஆ) 2006.03.31 ஆந் திகதியன்று வயது.-
   வருடங்கள்.----. மாதங்கள்.----. நாட்கள்.----.

4. பால் (ஆண்/பெண்) :----.

5. கல்வித் தகைமைகள்:- க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் அந்தந்தச் சுட்டெண்களின் கீழ் குறிப்பிடுக.

| சுட்டெண்.----. ஆண்டு.----. | சுட்டெண்.----. ஆண்டு.----. |
|---|---|
| பாடங்கள் | பாடங்கள் |
| 1. --------------- | 1. --------------- |
| 2. --------------- | 2. --------------- |
| 3. --------------- | 3. --------------- |
| 4. --------------- | 4. --------------- |
| 5. --------------- | 5. --------------- |
| 6. --------------- | 6. --------------- |
| 7. --------------- | 7. --------------- |
| 8. --------------- | 8. --------------- |

6. தேசிய அல்லது அஞ்சல் அடையாள அட்டை இல. :----.

7. (அ) விண்ணப்பதாரர் அனுமதிப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி.----.

   (ஆ) விண்ணப்பதாரர் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சை நிலையம்.----. (கொழும்பு, கண்டி, பதுளை, அநுராதபுரம், காலி)

8. பணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளையின் பெயர் : --------. (ரூபா 250 பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி இணைக்கப் படல் வேண்டும்)

நான் அளித்துள்ள மேற்குறித்த விபரங்கள் உண்மையானவை யெனவும் சரியானவையுமென இத்தால் உறுதிமொழிகிறேன். இங்கு குறிப்பிட்ட விபரங்கள் ஏதேனும் பொய்யானவை அல்லது பிழையா னவையென்று நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும், தெரிவின்பின் கண்டுபிடிக்கப்பட்டால் பயிற்சியில் இருந்து நீக்கப்படுவதற்கும் ஏதுவாவேன் என்பதையும் அறிவேன்.

----.
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி.----.

4-01

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2006**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 07.04.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2006 |
| | | புதன் | 12.04.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2006 |
| | | வெள்ளி | 21.04.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.04.2006 |
| | | வெள்ளி | 28.04.2006 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2006 |
| **மே** | .. | வெள்ளி | 05.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2006 |
| | | வியாழன் | 11.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2006 |
| | | வெள்ளி | 19.05.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.05.2006 |
| | | வெள்ளி | 26.05.2006 | .. | நண்பகல் 12 | வியாழன் | 11.05.2006 |
| **யூன்** | .. | வெள்ளி | 02.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2006 |
| | | வெள்ளி | 09.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2006 |
| | | வெள்ளி | 16.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2006 |
| | | வெள்ளி | 23.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2006 |
| | | வெள்ளி | 30.06.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2006 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.